# சக்தி (கூட்டு) வழிபாட்டிற்கு ஏற்ற பக்திப் பாடல்கள்

## 1. ராகுகால துர்க்கா அஷ்டகம்

தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே - அம்மா
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே

வாழ்வு மானவள் துர்க்கா வாக்கு மானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
(தேவி துர்க்கையே..)

உலகை ஈன்றவள் துர்க்கா உண்மை யானவள்
உண்மை யானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யை யானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
(தேவி துர்க்கையே..)

செம்மையானவள் துர்க்கா செபமு மானவள்
அம்மை யானவள் அன்பு தந்தை யானவள்
இம்மை யானவள் துர்க்கா இன்ப மானவள்
மும்மை யானவள் என்றும் முழுமை துர்க்கையே
(தேவி துர்க்கையே..)

உயிரு மானவள் துர்க்கா உடலு மானவள்
உலக மானவள் எந்தன் உடமை யானவள்
பயிரு மானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
(தேவி துர்க்கையே..)

துன்ப மற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையு மானவள் இன்பத் தோணி யானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபய வீடவள்
நம்மைத் தாங்கிட என்றுந் நடக்கும் துர்க்கையே
(தேவி துர்க்கையே..)

குருவு மானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமு மானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவு மானவள் துர்க்கா திருசூலி யானவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
(தேவி துர்க்கையே..)

ராகு தேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
(தேவி துர்க்கையே..)

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீரக்கனக துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளம் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெய துர்க்கை துர்க்கையே
(தேவி துர்க்கையே..)

## 2. ஓம் சக்தி ஓம்

ராகம்: மோஹனம் தாளம்: ஆதி

ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்

சுந்தரவதனி சுகுண மனோகரி
மந்த காசமுக வதிவதனே
சந்தன குங்கும அலங்காரமுடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே (ஓம் சக்தி ஓம்..)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாய் உன்புகழ் பாடவே (ஓம் சக்தி ஓம்..)

தங்கச் சிலம்பு கலகல வென்றிட
தாண்டவமாடி தனயன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி வருவாய் வருவாய் (ஓம் சக்தி ஓம்...)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி சரஸ்வதி வீணைவா சித்திட
சதானந்த மான ஜோதிஸ்வ ரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம் சக்தி ஓம்..)

முருகதாஸ்

---

## 3. சுத்த சக்தி ஓம் சிவம்

ராகம்: மாண்டு தாளம்: திஸ்ரஏகம்

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்

சத்யஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானத் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம் (சுத்தசக்தி)

வேதசாஸ்திர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சுத்தசக்தி)

நாதகீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்த்ர யந்த்ரதந்த்ர வஸ்யசக்தி ஓம்சிவம் (சுத்தசக்தி)

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோஹ சோகாகீத தபோசக்தி ஓம்சிவம் (சுத்தசக்தி)

துஷ்டசத்துரு நாகசக்தி துர்க்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலட்சுமி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சுத்தசக்தி)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபத நாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்திஓம் (சுத்தசக்தி)

---

## 4. அபிராமியே எங்கள் அபிராமியே

அபிராமியே எங்கள் அபிராமியே
அன்னை பராசக்தி அபிராமியே
அபிராமியே எங்கள் அபிராமியே

அபிமானம் கொண்டவர்க்கு சிவகாமி
ஆவேசம் கொண்டாளோ நவகாளி
ஆனந்தம் கொண்டாடும் காந்திமதி
அகிலம் கொண்டாடும் பார்வதியே (அபிராமியே)

பண்பான மயிலையில் கற்பகமே
பார் எல்லாம் காத்திடும் அற்புதமே
சொல் எடுத்தான் இவள் மங்களேஸ்வரி
வில் எடுத்தாள் இவள் சாமுண்டீஸ்வரி (அபிராமியே)

தாமரையில் இவள் தனலஷ்மி
பூமலரில் இவளே புவனேஸ்வரி
வீணையைக் கொண்டிருக்கும் கலைமகளே
வீட்டுக்கு வீடு வீடு அலைமகளே
மேலான காஞ்சியிலே காமாட்சி
மேன்மையான காசியிலே விசாலாட்சி
மேதினியோர் புகழும் மதுரை மீனாட்சி (அபிராமியே)

---

## 5. நவராத்திரி பாடல்

மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்
ஆதார முன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே?
ஏதாயி னும்வழிநீ சொல்வாய் எமதுயிரே!
வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே.

வாணிகலைத் தெய்வம் மணிவாக் குதவிடுவாள்
ஆணிமுத்தைப் போலே அறிவுமுத்து மாலையினாள்
காணுகின்ற காட்சியாய்க் காண்பதெல்லாங் காட்டுவதாய்
மானுயர்ந்து நிற்பாள் மலரடி சூழ்வோமே.

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னுநவ ரத்னம்போல் மேனி அழகுடையாள்
அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள் ஸ்ரீதேவி
தன்னிருபொற் றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

மலையிலே தான்பிறந்தாள், சங்கரனை மாலையிட்டாள்
உலையிலே யூதி உலகக் கனல்வளர்ப்பாள்
நிலையி லுயர்ந்திடுவாள், நேரே அவள்பாதம்
தலையிலே தாங்கித் தரணிமிசை வாழ்வோமே.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

---

## 6. சரஸ்வதி தோத்திரம்

வாணியைத் தொழுவோமே கலைவாணியைத் தொழுவோமே

நானிலம் புகழும் நான்முகன் நாவில்
நாளும் உறையும் நங்கை தனையே
(வாணியை..)

நர்மலரூபி நித்ய கல்யாணி
நிறைந்த ஜோதி விரைந்தோம் கூவி
(வாணியை..)

கல்விக்கரசியே காத்திடுவாயே
செல்வமும் கலையும் சேர்ந்திடவே தான்
(வாணியை..)

---

## 7. ரட்ச ரட்ச ஜெகன் மாதா

ரட்ச ரட்ச ஜெகன் மாதா
சர்வ சக்தி ஜெய துர்க்கா

மங்களவாரம் சொல்லிட வேண்டும்
மங்கள கண்டிகை ஸ்லோகம்
அதை ஒன்பது வாரம் சொல்லுவதாலே
உமையவருள் திருவருள் சேரும்

படைப்பவள் அவளே காப்பவள் அவளே
அழிப்பவள் அவளே சக்தி
அபயம் என்றவளை சரண் புகுந்தாலே
அடைக்கலம் அவளே சக்தி

ஜெய ஜெய சங்கரி கௌரி மனோகரி
அபயம் அளித்தருள் அம்பிகை பைரவி
சிவ சிவ சங்கரி சக்தி மகேஸ்வரி
திருவருள் தருவாள் தேவி (ரட்ச)

கருணையின் கங்கை கண்ணனின் தங்கை
கடைக்கண் கிடைத்தால் போதும்
வருகிற யோகம் வளர்பிறை யாகும் - அருள்
மழை பொழிவாய் நாளும்

நீல நிறத்தொடு ஞானம் வளர்த்தவள்
காளிய நர்த்தனி சூலம் எடுத்தவள்
பக்தருக் கெல்லாம் பாதை வகுத்தவள்
நாம் சொன்னால் நன்மை தருபவள் (ரட்ச)

---

## 8. மாணிக்க வீணை ஏந்தும்

மாணிக்க வீணை ஏந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ்ச் சொல்லெடுத்து பாடவந்தோம்
அம்மா பாட வந்தோம்
அருள்வாய் நீ இசைதருவாய் நீ இங்குவருவாய் நீ
நலம் தருவாய் நீ .. அம்மா

(மாணிக்க வீணை)

நா மணக்கப் பாடி நின்றால் ஞானம் வளர்ப்பாய்
பூ மணக்கப் பூஜை செய்தால் பூவை நீ மகிழ்வாய்

(மாணிக்க வீணை)

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள் எங்கள்
உள்ளக் கோயிலிலே உறைந்து நிற்பாய்
கள்ளமில்லாமல் தொழும் அன்பருக்கே என்றும்
அள்ளி அறிவைத் தரும் அன்னையும் நீயே

வாணி சரஸ்வதி மாதவி பாரதி
பாகதீஸ்வரி மாலினி..
காணும் பொருளில் தோன்றும் கலைமணி
வேண்டும் வரம் தரும் வேணி நீ
நான்முகன் நாயகி தேவி நீ
நான்மறை போற்றும் தேவி நீ
வானவர்க் கமுதே தேனருள் சிந்தும்
ஞான மனோகரி கல்யாணி

அருள்வாய் நீ இசை தருவாய் நீ
இங்கு வருவாய் நீ நலம் தருவாய் நீ - அம்மா

(மாணிக்க வீணை)

## 9. கலைவாணி நின் கருணை

கலைவாணி நின்கருணை தேன் மழையே
விளையாடும் என்நாவில் செந்தமிழே
அலங்கார தேவதையின் வனிதாமணி
இசைக் கலையாவும் தந்தருள்வாய் கலைமாமணி

(கலைவாணி)

மரகதவளைக் கரங்கள் மாணிக்கவீணை தாங்கும்
அருள்ஞானக் கரமொன்றில் ஜெபமாலை விளங்கும்
ஸ்ருதியோடு லயபாவ ஸவரராக ஞானம்
சரஸ்வதி மாதாவுன் வீணையில் எழும் கானம்

(கலைவாணி)

வீணையில் எழும் நாதம் தேவிஉன் சுப்ரபாதம்
வேணுவில் வரும் கானம் வாணிஉன் சக்ரவாகம்
வானகம் வையகம் உன்புகழ் பாடும்
வேண்டினேன் உனைப்பாட தருவாய் சங்கீதம்

(கலைவாணி)

## 10. சக்தி ஆராத்திப் பாடல்

ஜெய ஜெய ஜெய சக்தி ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெயவென தினம் பாடிப் பணிந்தோம்
ஜெக மெங்கும் அமைதியைத் தா
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

திருப்தியும் இன்பமும் வாழ்வினுற் றுலங்க
தேவை யெல்லாம் மறைய - அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பில் எமை
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி பல மருள்வாய் - அம்மம்மா
கரம் குவிப்போம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய்
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் - அம்மம்மா
தேசுடன் வாழ காட்டடி காட்சி
தேவி உன் அடைக்கலம் யாம்
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து - அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்வோம்
ஞாலத்துக் கமைதியைத் தா
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி

ஜெய ஜெய ஜெய சக்தி ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஜெய சக்தி
ஜெய ஜெயவென தினம் பாடிப் பணிந்தோம்
ஜெக மெங்கும் அமைதியைத் தா
ஓம் ஸ்ரீ ஜெய ஜெய ஜெய சக்தி





